<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 291/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிஷோர் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.11.2024

<u>முதல் விசாரணை</u>

நான் வெஞ்சமடையில் வசித்து வருகிறேன். தற்போது சுய உதவி குழுவில் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு Zomato நிறுவனத்தில் பணிபுரிந்த போது கடந்த 2010.2022 ம் தேதி நான் ஸ்டார்பேக்கரில் டீ சாட்பபிட்டு கொண்டிருந்த போது போலிசார் ஒருவர் இருசக்கர வானத்திலும் எதிர் பார்ட்டி மற்றொரு இரு சக்கர் வாகனத்திலும் வந்து வாக்குவாதம் செய் கொண்டிருந்தனர். பின்னர்எதிர் பார்ட்டி போலிசாரை அடித்து விட்டார். எதிர் திசையில தவறுதலாக வந்து போலிசார் வந்த வாகனத்தின் மீது மோத வந்ததால் இந்த தகராறு ஏற்பட்டது. போலிசார் கீழே விழுந்து விட்டார் நான் தூக்க சென்றேன் அவருக்கு போன் வந்ததால் கிளம்பி விட்ார் அவருக்கு முனபாக எதிர் பார்ட்டி கண்ணன் சென்று விடடார். எனக்கு புட் டெலிவரி ஆர்டர் வந்ததால் நானும் கிளம்பி விட்டேன். மறுநாள் போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. Zomato கம்பெனியில் ஆர்டர் செய்வதை எங்கு எங்கு செல்கிறோம் என்பதை குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். ஸ்டார் பேக்கரிக்கு டீ சாப்பிட சென்றிர்கள் என்றாலும் , உள்ளே அமர்ந்து டீ சாப்பிட்டிர்கள்

என்றாலும் வெளியில் நின்று கொண்டிருந்தேன். அடுத்த நாள் தான் தெரியும் போலறு எப்படி தெரிந்து கொண்டிரகள் என்றால் அடுத்த நாள் தெரிந்து கொணடேன். போலிசார், கண்ணன் மது அருந்திருந்தார்களா என்ற விவரம் தெரியாது என்றால் தெரியாது. போலிசார் ஓட்டி வந்த வண்டி எண் 0824 எதிரி ஓட்டி வநத் வண்டி எண் 7101 ஆகும்.

2. கேரளா வண்டி எந்த திசையில் சென்றது என்றால் தளி – உடுமலை ரோட்டில் உடுமலை டவுன்க்கு வந்தது. கேரளா வண்டி எண் தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் விசாரணையில் இந்த சங்கதியை கூறினிர்களா என்றால் உடுமலையிலிருந்து தளி சென்றதாக கூறியுள்ளேன். சம்பவத்தை நேரில் பார்க்வில்லை என்றால் கேரளா வண்டி சென்றது குறித்து மாற்றி கூறிகிறிர்கள் என்றால் சரியல்ல. ரஞ்சித் உள்ளே டீ சாப்பிட்டு கொண்டிருந்தார் என்றும் சத்தம் கேட்டு தான் வெளியே வந்து சம்பவத்தை பார்த்தார் என்று கூறியுள்ள நிலையில் நான் வெளியே தான் நின்று கொண்டிருந்தேன்.

3. சம்பவ இடத்தில் போலிசார் வந்தார்களா என்றால் வந்தார்கள் எத்தனை மணி என்றால் 9.30 மணிக்கு பேக்கரிக்கு வந்தார்கள். நான் ஆர்டர் வந்தது என்று சென்று விட்டேன். நீங்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் நீங்கள் போலிசாரில் கையிருப்பு சாட்சி என்பதாலும் பாதிக்கப்பட்டவர் போலிசார் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிககிறிர்கள் என்றாலும் சரியல்ல. நீங்கள டெலிவரி செய்ததற்காக ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் 2 வருடம் ஆனதால் தெரியாது எங்கள் இரண்டு பேரை தவிர நிறைய பேர் அங்கு இருந்தார்கள். அவர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். போலிசார் வரும் போது அங்கு நீங்கள இல்லை என்றால் போலிசாரிடம் நம்பர் கொடுத்து விட்டு சென்று விட்டேன். உங்களிடம் நம்பர் வாங்கிய போலிசார் கீழே விழுந்தவரா அல்லது வேறு யார் என்றால் காவல் நிலையத்தில் வந்து வாங்கினார். நானும் ரஞ்சித்தும் டெலிவரி கொடுக்க அங்கு வரவில்லை டீ சாப்பிட தான் வந்தோம்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.